# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது

අංක 2107/20 - 2019 ජනවාරි මස 22 වැනි අඟහරුවාදා - 2019.01.22

*2107/20 ஆம் இலக்கம் - 2019 ஆம் ஆண்டு சனவரி மாதம் 22 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


## பகுதி III - காணிகள்

## காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது இல.: GM/DS/HW/2015/2/21/133.

காணி அமைச்சின் இல.: 4-3/8/2016/HA/218.

ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதான கீழ்க் காணும் காணியை எடுத்துக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதை 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்கக் காணி எடுத்தற் (திருத்தம்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உப பிரிவின் கீழ் நான், இத்தால் அறிவிக்கின்றேன்.

**எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம் :**

மேல் மாகாணம், கம்பஹா மாவட்டத்தில், கம்பஹா பிரதேச செயலாளர் பிரிவில் பரகன்தெனிய கிராமத்தில், இல. 244பி, பரகன்தெனிய வடக்கு கிராம அலுவலர் பிரவில் அமைந்துள்ள சர்வேயார் ஜனரலுக்குப் பதிலாக கம்பஹா சிரேஷ்ட நில அளவையாளர் அத்தியட்சகரால் தயாரிக்கப்பட்ட 2018.11.14 ஆந் திகதிய ஆ. வ. இ. 4109 வரைபடத்தில் காட்டப்பட்ட 0.0152 ஹெக்டயார் விஸ்தீரணமுடைய கீழ் விபரிக்கப்பட்ட காணித் துண்டு :

*01.* **துண்டு இல. 01**

காணியின் பெயர் : மில்லகஹவத்தை; விபரம் : வீடு, நிரந்தரக் கட்டிடம் காணப்படுகின்றது; உரிமை கோருவோர் : ஏ. டி. கே. தர்மசிறி, இல. 262, பரகன்தெனிய, இம்புல்கொட; விஸ்தீரணம் : 0.0152 ஹெக்டயார்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2019 ஆம் ஆண்டு மே மாதம் 08 ஆந் திகதி மு. ப. 10.00 மணிக்கு, கம்பஹா பிரதேச செயலகத்தில் என் முன்பாக வெளிப்படுத்தும் படியும், மேலும் அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நஷ்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும், நஷ்டஈட்டுத் தொகையையும், அத்தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும் 2019 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 29 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இரு பிரதிகளாக எனக்கு அறிவிக்கும் படியும் இத்தால் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

கே. ஏ. எஸ். லக்மினி குணத்திலக்க,
பிரதேச செயலாளர் மற்றும்
காணி எடுத்தல் அலுவலர்,
கம்பஹா.

பிரதேச செயலகம்,
கம்பஹா,
2019, சனவரி 18.

2 - 240